

# “மத நல்லிணக்கமும் சமூகநீதியும் தமிழ்நாட்டின் தனித்துவங்கள்!”

**கழக இளைஞர் அணி நடத்திய, ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற முற்போக்கு புத்தகக் காட்சி நிகழ்வில், ‘தமிழ்நாடு என்னும் தனித்துவம்’ என்ற தலைப்பில், விடுதலைச்சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் ஆளூர் ஷா நவாஸ் அவர்கள் ஆற்றிய உரை :**



**ஆளூர் ஷா நவாஸ்**
துணைப் பொதுச்செயலாளர்,
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

“மிக முக்கியமான ஒரு விழா இது. தமிழ்நாட்டில், ‘சாதியாய் திரள்வோம் வா’ என்று அழைப்பதற்கு கூட்டம் இருக்கிறது. மதவெறியை ஊட்டி, ‘மதவெறி அடிப்படையில், திரள்வோம் வா’ என்று அழைப்பதற்கும் கூட்டம் இருக்கிறது. இனவெறியை ஊட்டுவதற்கும் கூட்டம் இருக்கிறது. சாதிவெறி அடிப்படையிலும், மதவெறி அடிப்படையிலும், இனவெறி அடிப்படையிலும், இப்போது இன்னும் கூடுதலாக சினிமா கவர்ச்சியின் அடிப்படையிலும், தமிழ்நாட்டு இளைஞர்களைத் திரட்டுவதற்கு ஆங்காங்கே கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோது, பகுத்தறிவுப் பாதையில், அறிவுப் பாதையில் இளைஞர்களைத் திரட்டுகிற ஒரு மகத்தான முயற்சி, இன்றைக்கு இங்கே முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

கலைஞர் வள்ளுவர் கோட்டத்தைக் கட்டி, பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், அந்த வள்ளுவர் கோட்டம் முழுமையான பயன்பாட்டுக்கு இப்போதுதான் வந்திருக்கிறது. அந்த வகையில், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர், அருமைச் சகோதரர் உதயநிதி அவர்களை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில், நெஞ்சாரப் பாராட்டுகிறோம்.

## கொள்கை வாரிசு

அவரை ஏன் நாங்கள் ஆதரிக்கிறோம். அவரை ஏன் நாங்கள் வரவேற்றுப் பேசுகிறோம் என்பதற்கு, இந்த நிகழ்வே ஒரு சான்றாக இருக்கிறது. வாரிசுகள் எல்லா கட்சியிலும் இருக்கிறார்கள். வாரிசு என்பதற்காகவே அவர்களை எதிர்க்க வேண்டும் என்றும்கூட, நமக்கு சொல்கிறார்கள். குருதி வாரிசுகள் எல்லா கட்சியிலும் இருக்கிறார்கள். அதேபோல் முத்தமிழறிஞர் கலைஞருக்கு குருதி வாரிசு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அவருடைய குருதி வாரிசுதான் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் என்று சொல்லிவிட முடியுமா? இல்லை, எல்லா கட்சிகளிலும் குருதி வாரிசுகள் இருக்கிறார்கள். ஆனால், முதலமைச்சரும் துணை முதலமைச்சரும் கொள்கை வாரிசாக இருக்கிறார்கள்.

‘சாதி என்பது அழகிய சொல்’ என்று ஒரு அரசியல் கட்சித் தலைவர் சொல்கிறார். அவரும் ஒரு வாரிசுதான். ‘சனாதன ஒழிப்பே என்னுடைய இலக்கு’ என்று துணை முதலமைச்சர் சொல்கிறார். இவரும் வாரிசுதான். இரண்டு வாரிசுகளில் எந்த வாரிசு நம்முடைய தேர்வாக இருக்க வேண்டும் என்பதுதான், நமக்கு முன்னால் உள்ள கேள்வி. ராகுல் காந்தியும் வாரிசுதான். மோடி வாரிசு இல்லை. அதற்காக மோடியை ஆதரித்துவிட முடியுமா? அந்த அடிப்படையில், இன்றைக்கு இப்படிப்பட்ட அறிவுத் திருவிழாவை அரசியல் ரீதியில், முன்னெடுக்கிற ஒரே வாரிசு இவர் மட்டும்தான் இருக்கிறார். அதனால் நாங்கள் அவரை ஆதரிக்கிறோம்.

## பெரியாரின் அறம்

ஒரு சமய நம்பிக்கை உள்ளவர்கள், இன்னொரு சமய நம்பிக்கை உள்ளவர்களை மதித்துப் போற்றுவதுதான் தமிழ்நாட்டின் தனித்துவம் .

சரி, இதெல்லாம் சமய நம்பிக்கை உள்ளவர்களுக்கு. சமய நம்பிக்கை இல்லாத தலைவரால் முன்னெடுக்கப்பட்ட இயக்கம் அல்லவா திராவிட இயக்கம்? பெரியார் கடவுள் மறுப்பாளர் அல்லவா, அவருடைய நிலைப்பாடு வேறாயிற்றே என்று நீங்கள் நினைக்கலாம். அவருடைய நிலைப்பாடு வேறாக இருந்தாலும், அவர் எப்படிப்பட்ட மாண்போடு நடந்துகொண்டார்?


கடவுள் வாழ்த்துப் பாடும்போது, எழுந்து நின்று மரியாதை கொடுத்தவர் தந்தை பெரியார். தன்னுடைய நண்பர் டி.கே.சி.ரசிகமணியின் 60–ஆம் கல்யாணத்துக்காக முருகன் கோயிலுக்குள் சென்றவர் பெரியார். தன்னுடைய நண்பர் திரு.வி.க. மறைந்தபோது, அந்த இறுதி நிகழ்வு நடக்கின்ற இடத்திற்கே சென்று தன்னுடைய தோழர்களை விட்டு, இறுதி நிகழ்வுகளைச் செய்யுங்கள், அவருக்கு மரியாதை செய்யுங்கள், ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று பெரியார் சொல்கிறார். தோழர்கள் ஏற்பாடு செய்யப் போகிறார்கள். அப்போது தமிழறிஞர் ஞானசம்பந்தன் அவர்களும், தமிழறிஞர் மு.வரதராசனார் அவர்களும் பெரியாரிடம் வந்து, ‘ஐயா! அவருக்கு சைவ முறைப்படி இறுதிச் சடங்கு செய்ய வேண்டும். திருமந்திரங்கள் எல்லாம் ஓதி, அவரை நாங்கள் அனுப்பி வைக்க வேண்டும். எனவே, நாங்கள் செய்கிறோம்’ என்று சொன்னபோது, ‘தாராளமாகச் செய்யுங்கள்’ என்று சொல்லி, திரு.வி.க. இறுதிச் சடங்கில் மந்திரங்கள், திருமந்திரங்கள் ஓதப்படும்போது, எழுந்து நின்று கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்திய தலைவர் பெரியார். இந்த மரபு எங்களுடைய மரபு.

## அப்துல் ரகுமானின் சொற்சிலம்பம்

கம்பன் கழகம் ஒவ்வோர் ஆண்டும் கம்ப ராமாயணம் பற்றி கூட்டம் நடத்துவார்கள். அதில் கம்பராமாயணத்தில் பாண்டித்யம் பெற்ற அறிஞர்களை அழைத்துப் பேச வைப்பார்கள். அதில் ஒருமுறை கவிக்கோ அப்துல் ரகுமான் பேசுவார் என்று அறிவிப்பு செய்யப்பட்டவுடனே ஒரு சர்ச்சை.

‘அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன சம்பந்தம்? இங்கே இவருக்கு என்ன வேலை? அப்துல் ரகுமான் வந்து இங்கே என்ன பேசப் போகிறார்?’ என்று ஒரு சர்ச்சையைக் கிளப்பி விட்டார்கள். அந்த விழாவில், உரையாற்றும்போது கவிக்கோ அப்துல் ரகுமான் ‘இங்கே சிலர், இராமாயணத்துக்கும் ரகுமானுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டார்களாம். இராமாயணமே ரகுவாகிய ராமன், அதாவது ரகு, மானைத் தேடிப் போனது தானே’ என்று சொன்னார். அந்த சர்ச்சையைக்கூட மிக அழகாக எதிர்கொண்டார் ரகுமான். கொள்கை ரீதியில் மாற்றுக் கருத்து இருக்கிறது. ஆனால், மனிதர்களுக்கிடையில் வெறுப்பு இல்லை என்பதை ஊட்டி வளர்த்த மண் தமிழ்நாடு. அதனால்தான், இங்கே நல்லிணக்கம் தழைத்து நிற்கிறது.

இந்தியா முழுவதும், இன்று மத அடிப்படையில் மக்கள் பிரிந்து கிடப்பதைப் பார்க்கிறோம்.



‘புதுகை பூபாளம்’ கலைக்குழு

அந்தப் பிளவை ஏற்படுத்தி, அதன் மூலம் பா.ஜ.க. வாக்குவங்கி அறுவடை செய்வதைப் பார்க்கிறோம். தமிழ்நாட்டில் அது நடக்கவில்லை. சிறுபான்மை மக்களைப் பெரும்பான்மை மக்களின் எதிரியாகக் காட்டி, வில்லனாகக் காட்டி ஓர் அரசியலை அவர்களால் மிக எளிதாக முன்னெடுக்க முடிகிறது. அதில் வெற்றியும் பெற முடிகிறது. அப்படித்தான் அவர்கள் மூன்று முறை தொடர்ந்து நாட்டைப் பிடித்திருக்கிறார்கள். 2014-இல் பிரதமர் வேட்பாளராக மோடி முன்னிறுத்தப்பட்டார். பிரதமர் ஆனார். 2019-இல் மீண்டும் ஆனார். 2024-இல் மீண்டும் ஆகியிருக்கிறார். மூன்று முறையும் மோடியை ஏற்காமல் நிராகரித்த மாநிலம் தமிழ்நாடு.

## தனித்துவம்

எப்படி ராமர் கோவிலை, அங்கே அயோத்தியில் அதை வைத்து ஒரு வெறுப்பு அரசியலை முன்னெடுத்து, மிக வெற்றிகரமாக அங்கே அவர்கள் அதை செய்து முடித்தார்களோ, அதே பாணியை, திருப்பரங்குன்றத்தில் எடுத்துக்கொண்டு வந்தார்கள். ஆனால், திருப்பரங்குன்றத்து மக்கள் அவர்களை நிராகரித்தார்கள். கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக, திராவிட இயக்கம் ஊட்டிய நல்லிணக்க உணர்வு இது.

இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் ஆதிக்கங்களை ஏற்றுக்கொண்டாலும், அதை ஏற்றுக்கொள்ளாத தனித்துவம் தமிழ்நாட்டுக்கு உண்டு. அதனால்தான் இந்தித் திணிப்பை முதன்முதலில் எதிர்த்தோம், பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டபோது அதை எதிர்த்துப் போராடி வென்றோம், நீட்டை எதிர்க்கிறோம், புதிய கல்விக் கொள்கையை எதிர்க்கிறோம், ‘ஆளுநர் முறையே வேண்டாம்’ என்கிறோம். இப்படி தொடர்ந்து முற்போக்காகச் சிந்திப்பதே தமிழ்நாட்டின் தனித்துவம்”. ●

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

ஆளூர் ஷா நவாஸ் பேசுவதற்கு முன், ‘புதுகை பூபாளம்’ கலைக்குழுவின் நிகழ்ச்சி நடைபெற்றது. சாதியம், மதவாதம், ஒன்றிய அரசின் ஜனநாயக மறுப்புத்தன்மை ஆகியவற்றைக் கிண்டலடிக்கும்வகையில், பூபாளம் கலைக்குழுவின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. குறிப்பாக, முருகனை முன்வைத்து மதவாத அரசியலை நடத்த முயல்பவர்களை அம்பலப்படுத்தும் வகையில், சில பாடல்களைப் பாடினர். புதுகை பூபாளம் கலைக்குழு நிகழ்ச்சியைத் தொடர்ந்து பேசிய ஆளூர் ஷா நவாஸ், முருகன் பாடலைப் பாடியது, இணையத்தில் வைரல் வீடியோவாகப் பரவியது. ஆளூர் ஷா நவாஸ் பேசிய பகுதி :

“எனக்கு முன்னால் கலைநிகழ்ச்சி நடத்திய புதுகை பூபாளம் குழுவைச் சேர்ந்த தோழர்கள் மிகச் சிறப்பாக தங்களின் கருத்துகளைக் கலையின் வடிவத்தில் வெளிப்படுத்தினார்கள். முருகன் பாட்டுகளை நிறையவே பாடினார்கள். அது என்னுடைய பழைய நினைவுகளைக் கிளறிவிட்டது போல ஆகிவிட்டது.

(பாடுகிறார்) “அற்புதமாகிய அருட்பெரும் சுடரே, அற்புதமாகிய அருட்பெரும் சுடரே, அருமறை தேடிடும் கருணையின் கடலே. நிற்பதும், நடப்பதும் நின் செயலாலே, நினைப்பதும் நிகழ்வதும் நின் செயலாலே, கற்பதெல்லாம் உந்தன் கனிமொழியாலே, காண்பதெல்லாம் உந்தன் கண்விழியாலே, கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உனை மறவேன். கந்தனே உனை மறவேன். கந்தனே உனை மறவேன்”

(பாடி முடித்தபிறகு) திட்டமிட்டு வந்திருந்தால் பாடியிருக்க முடியாது. இவர்கள் இன்று, முருகன் பாட்டைப் பாடுவார்கள் என்று எனக்குத் தெரியாது. மேடையில் இருக்கும் என்னிடம் கையில் தொலைபேசியும் இல்லை. என் உதவியாளரிடம்தான் தொலைபேசி இருக்கிறது. உடனே எடுத்து இந்தப் பாடலைப் படிப்பதற்கோ மனப்பாடம் செய்வதற்கோ வாய்ப்பு இல்லை. என் நினைவிலிருந்து இந்தப் பாடலை நான் பாடுகிறேன்.

என் நினைவுக்குள் எப்படி முருகன் வந்தார்? டி.எம்.எஸ். மிகச் சிறப்பாகப் பாடிய, ‘கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உனை மறவேன்’ என்கின்ற பாட்டு என் நினைவில் எப்படி ஏறியது? நான் சைவ மதத்தைப் பின்பற்றுகிறவனா? இந்து மதத்தைச் சேர்ந்தவனா? இல்லை. நான் இஸ்லாமிய சமூகத்தில் பிறந்து, இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவன். எனக்குள் எப்படி இந்தப் பாட்டு வந்தது? ஏனென்றால், நான் இளம் வயதில் என் ஊரைச் சுற்றி என் வீட்டைச் சுற்றி இருக்கின்ற கோயில்களில் போடப்படுகின்ற பாடல்களைக் கேட்டு கேட்டுத்தான் விழித்தேன், எழுந்தேன், வளர்ந்தேன்.

பக்கத்தில் இருக்கின்ற தேவாலயத்தில் போடப்படுகின்ற பாடல்களைக் கேட்டுத்தான் விழித்தேன், எழுந்தேன், வளர்ந்தேன். இசைமுரசு நாகூர் ஹனிபா அவர்களுடைய பாடல்களைக் கேட்டுத்தான் விழித்தேன், எழுந்தேன், வளர்ந்தேன். எல்லாம் உள்ளுக்குள் இருக்கிறது. இதுதான் தமிழ்நாடு”